விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 259 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 18 செவ்வாய்க்கிழமை (03.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# தமிழரசுக் கட்சிக்குள் வலுக்கும் உட்பூசல்

## சஜித்தை ஆதரித்ததை ஏற்க முடியாது சிறீதரன் எம்.பி காட்டம்



(லண்டன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் மோதல் நிலை வலுவடைந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரிப்பது என்ற மத்திய குழுவின் தீர்மானத்தை ஏற்க முடியாது என சிறீதரன் எம்.பி காட்டமாகத் தெரிவித்துள்ளார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ப் பொது வேட்பாளரின்
### தேர்தல் விஞ்ஞாபனம் இன்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பொது வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் இன்று யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 15ஆம் திகதி புலமைப் பரிசில் பரீட்சை

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை இம்மாதம் 15ஆம் திகதி இடம் பெறுமென பரீட்சைகள் ▷15

## பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் பொறுப்பு எமக்கானது

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாமல்



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொறுப்பு எனக்கும், எனது கட்சிக்கும் உண்டு. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பொறுப்பற்ற வகையில் நாங்கள் செயற்படவில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ▷04

## மத்திய குழு தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவோம்


### பல்டியடித்த மாவை

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்தை எவ்வாறு இணைந்து நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி அடுத்த கூட்டத்தில் தீர்மானிப்போம் என அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

யாழில் நேற்று நடைபெற்ற முன்னாள் பாராளுமன்ற ▷15

## அலங்காரக் கந்தனின் தீர்த்தோற்சவம்



## சுன்னாகம் பொலிஸாரால் குடும்பஸ்தர் மீது தாக்குதல்

### மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸாரால் குடும்பஸ்தர் ஒருவர் மீது கடுமையாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.பிராந்திய அலுவலகம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என அதன் இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார்.

மேலும் சுன்னாகம் பொலிஸ் நிலைய அதிகாரிகளால் தனது கணவர் கடுமையாக தாக்கப்பட்டு உடல் ▷15

## மோ.சைக்கிளிலிருந்து விழுந்த பெண் மரணம்

### செம்பியன்பற்றில் சம்பவம்



(கரணவாய்)

மோட்டார் சைக்கிளால் விழுந்து படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி ▷15

## இலங்கை மற்றைய நாடுகளிடமிருந்து கடன் வாங்குவதை நிறுத்த வேண்டும் - ரணில்

(கொழும்பு)

இலங்கை மற்றைய நாடுகளிடம் இருந்து கடன் வாங்குவதை நிறுத்தக்கூடிய சகாப்தத்தை உருவாக்க அனைத்துத் தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு ▷15



## குடும்ப ஆட்சியையே ராஜபக்ஷவினர் முன்னெடுத்தனர் அநுர தெரிவிப்பு

(கொழும்பு)

ராஜபக்ஷவினர் குடும்ப ஆட்சியையே முன்னெடுத்ததாக தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார ▷04

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிப்பு

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

அரச ஊழியர்களின் வேதனம் தொடர்பிலான பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட நிபுணத்துவக் குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் ஜனவரி 1, 2025 முதல் அரச ஊழியர்களின் அடிப்படை வேதனம் 24 - 50 சதவீதம் வரையில் அதிகரிக்கப்படவுள்ளது. (ம-7)

# வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகம்

(கொழும்பு)


ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை தபால் திணைக்களம், வீடுகளுக்கு சென்று விநியோகிக்கும் என தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

தமது திணைக்களத்திற்கு கிடைக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை விநியோகத்தை இன்று முதல் ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

2024 ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


வெல்க தமிழ்
சங்கு எங்கள் சின்னம்

எமது அரசியல் அபிலாஷைகள்
ஒரே குரலாய் ஓங்கி ஒலித்திட
கட்சிகளைக் கடந்து
தமிழ் இனமாகச் சிந்திப்போம்!



எங்களிடம்
இருக்கும்
ஜனநாயக ஆயுதம்
வாக்குகள்தான்.
இம்முறையாவது
இலக்குத் தவறாது
பிரயோகிப்போம்.



(C-002)
தமிழ்ப் பொது வேட்பாளர்
பா.அரியநேத்திரன்
தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு



வீடு விற்பனைக்கு

புனித ஜோன் பொஸ்கோ பாடசாலைக்கு
அருகாமையில் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய
1¾ பரப்பு வீடு விற்பனைக்கு உண்டு.
◈ விலை பேசித் தீர்மானிக்கலாம்.
(1843)
தொடர்புகளுக்கு: 076 116 3919


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 02 . 1947

மறைவு 15 . 09 . 2023

அமரர் **இளையதம்பி செல்லத்துரை(VMT)**

திதி : 03.09.2024

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்களை இழந்த துன்பமும் துயரமும்
எங்கள் மனதை விட்டு மறையவில்லையே!!
உள்ளத்தில் பல கனவு ஒன்றாக நாமும் கண்டோம்
கனவெல்லாம் நனவாகும் காலம் வருமுன்னே
கண்மூடி மறைவாய் என்று
கனவிலும் நினைக்கவில்லை!
எத்தனை இன்னல்கள் வந்தாலும் அப்பா
நீங்கள் எம்மோடு இருக்கின்றீர்கள்
என்றெண்ணி வாழ்ந்தோம் ஆறாத்துயராய் ஆனதே
உங்கள் பிரிவு எம்முள்ளே.
எம்முயிரான எங்கள் ஐயாவே!
நீங்கள் இறைவனடி சேர்ந்து ஓராண்டு
கடந்து விட்டாலும் நீங்கள் எப்பொழுதும்
எம்முன் நிற்கின்றீர்கள்!
நிழல் போலத் தொடர்ந்து வந்த அன்பே!
உணர்வோடு கலந்த உயிர்மூச்சை
உள்ளடக்கி கண்ணீரை காணிக்கையாக்குகிறோம்.


(279)

மீளாத் துயருடன் : குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## அரியகுட்டி நற்குணம்

### [ஓய்வுநிலை தபால் அதிபர் ]



தோற்றம் 05.06.1943 மறைவு 02.09.2024

அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் தியேட்டர் வீதி, இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட அரியகுட்டி நற்குணம்(ஓய்வுநிலை தபாலதிபர்) அவர்கள் 02.09.2024 திங்கட்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அரியகுட்டி - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - இலட்சுமியின் அன்பு மருமகனும் சரஸ்வதி (முன்னாள் கட்டிடங்கள் திணைக்களக் காசாளர்) அவர்களின் அன்புக் கணவரும் இராசகிளி, காலஞ்சென்ற கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தர்மலிங்கம், பஞ்சலிங்கம், தியாகலிங்கம், மகாலிங்கம், முத்துலிங்கம், சின்னராசா, பிறேமாவதி, ஞானேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் நக்கீரன், தாரினி(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி), தர்சினி(இலண்டன்), தமிழினி(அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், நல்லூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரசாத்(உரிமையாளர் - பிரசாத் மரக்காலை,சுன்னாகம்), சந்திரா(சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்), சிதம்பரகுமார்(இலண்டன்), யோகானந்(அபிவிருத்தி உத்தியோகத்தர் - மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் நிரோசன்(கப்பல், மின் பொறியியலாளர்), கௌசிகா, சுஜேஸ்கா(கணக்காளர் - பிரதேச செயலகம், பூநகரி), லதிக்கா(தபால் திணைக்களம்) ஆகியோரின் பெரியப்பாவும் கேமலதாவின் மாமனாரும் மகிழினியன், குழலினி, அருண்சாயித், சஸ்வதன், திபிசனா, நிஸ்வின், தஸ்வந்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.09.2024) இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 01 மணியளவில் தியேட்டர் வீதி, இணுவிலில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இணுவில் கிழக்கு, இணுவில். (1842) தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துக்கணிப்புகளை அவதானித்து கைது செய்யுங்கள்-பொலிஸாருக்கு பணிப்புரை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக சமூக வலைத்தளங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கருத்துக் கணிப்புகளை அவதானித்து உரியவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுகள் இன்று முதல் வீடு வீடாக விநியோகிக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 2024 ஜனாதிபதித் தேர்தல் உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுக்கள் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விநியோகிக்கப்படும் என்றும் வரும் ஞாயிற்றுக் கிழமை 8 ஆம் திகதி சிறப்பு வாக்குச் சீட்டு விநியோக நாளாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி)





(1830)



(சி-2396)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் சபாலிங்கம் ஞாபகார்த்த ரி-20 துடுப்பாட்ட போட்டி இன்று




அதிபர் சபாலிங்கம் ரி-20 துடுப்பாட்டப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

இப் போட்டியில் யாழ். இந்துக்கல்லூரி அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதுகின்றது. (நி)

# வட்டுக்கோட்டை கிழக்கில் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை கிழக்கைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான பரமேஸ்வரன் ருக்சான் (வயது - 36) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

தூக்கிட்ட நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)

## பொருளாதார...

ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (02) கொழும்பு ரத்னதீப நட்சத்திர ஹோட்டலில் இடம்பெற்றது. இதன்போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாக்க நிபந்தனையில்லாமல் போரிட்டவர்களையும், பௌத்த சாசனத்தையும் பாதுகாக்க வேண்டியது எமது பிரதான கொள்கையாகும். பொருளாதார நெருக்கடிக்கு எம்மால் நிச்சயம் தீர்வு காணமுடியும்.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் பொறுப்பு எனக்கும், எனது கட்சிக்கும் உண்டு. குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பொறுப்பற்ற வகையில் நாங்கள் செயற்படவில்லை. 30 வருட கால யுத்தத்தை நாங்களே முடிவுக்குக் கொண்டு வந்தோம்.

சூழ்ச்சிகளினால் எம்மையும், எமது அணியையும் வீழ்த்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போது நாட்டுக்காக சிறந்த தீர்மானங்களை எடுத்தோம். நாட்டை முன்னேற்றும் ஆளுமை மற்றும் திறமை எம்மிடமுள்ளது. எதிர்வரும் 10 ஆண்டுகளில் நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியை இரண்டு மடங்காக அதிகரித்துக் கொள்ள வேண்டும். அதற்கான திட்டங்கள் எம்மிடம் உள்ளன.

தேர்தல் மேடைகளில் ஊழல் ஒழிப்பு என்று தொடர்ச்சியாக எழுப்பப்படும் கோசத்தை ஆட்சிக்கு வந்து மூன்று ஆண்டுகளில் முடிவுக்குக் கொண்டு வருவோம். மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைகளை நான் கடைப்பிடிப்பேன் என்றார். (ம-7)

## தமிழரசுக்...

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று முன்தினம் தீர்மானித்தது.

இந்நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கான எதிர்வினையை எதிர்வரும் நாட்களில் வெளிப்படுத்தவிருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தற்போது லண்டன் சென்றுள்ள அவர், கட்சியின் தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இந்த விடயத்தைக் கூறினார்.

கடந்த காலங்களில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு ஆதரவாக கருத்துக்களை வெளியிட்டு வந்த சிறீதரன் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்று தெரிவித்தார்.

இதேவேளை, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா மற்றும் மாவட்ட ரீதியாகக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொள்ளாத நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக நல்லூர் உற்சவ நாளில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில், அதனை ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ராஜபக்ஷ...

திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தார்.

தற்போது அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.79 வயதான மஹிந்த ராஜபக்ஷ தமது மகனுக்காக மேடையேறுகிறார். கடும் கஷ்டத்துடன் அவர் மேடைகளில் ஏறுகிறார்.

நடக்கக் கஷ்டப்படுகிறார். இவ்வளவு கஷ்டப்பட்டு மேடைகளில் ஏறுவதற்கான காரணம் பொதுமக்களின் நலன் கருதியா? இல்லை.

தமது பிள்ளையின் வெற்றிக்காகவே எனத் தேசியமக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3212

**கஜன்**




**துஷி**




**தர்மினி**




**திவ்யா**




**அக்ஷரா**




**விதுஷா**




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

நூலகம் அறக்கட்டளை மூலம் எண்ணிமப்படுத்தப்பட்டது.
noolaham.org | aavanaham.org




## பூங்காவனத் திருவிழா

மங்கையர்கள் கரம் பிடித்து மக்கள் போல
மன்னனவன் வதுவை செய்யும் காட்சி கண்டு
பொங்குகிற உறவதனால் கந்தன் தன்னைக்
புதியதொரு மணமகனாய் நினைந்து அன்பர்
தங்கருத்தை இழந்தேதான் தரணிதன்னில்
தாம் மகிழ்ந்து ஐயனையே வாழ்த்தி நிற்பர்
வெண்கரியின் ஏறனைய வேலன்தானும்
விரும்பிப் பூந்தண்டிகையில் வீதி சேர்வான்

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி தான்தோன்றி வாரிவனேஸ்வரர் தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 11 மணிக்கு தீர்த்த திருவிழாவும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 108 லிங்கங்களுக்கான மஹா கும்பாபிஷேகம் இடம்பெறும்.


6 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 7 ஆம் திகதி சனிக்கிழமையும் எண்ணெய் காப்பு நிகழ்வு இடம்பெறும். 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.26-10.26 மணி வரையுள்ள சுபவேளையில் கும்பாபிஷேகம் இடம் பெறும் என ஆலய தர்ம கர்த்தா அறிவித்துள்ளது. (நி)

## இன்று கூடுகின்றது பாராளுமன்றம்

(கொழும்பு)

பாராளுமன்றம் செப்ரெம்பர் 3 மற்றும் 4ஆம் திகதிகளில் கூடவிருப்பதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹனதீர தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. (நி)






## நல்லைக் கந்தவேளே!

அரும்புலவர் நாயனார் அகத்திலே யுனைப்போற்றி
அளித்திட்ட செய்யுளமுதம்
கரும்பென்று சுவையுறும் கவிக்கடற் பெருக்கினைக்
கரையிலே நின்றுபார்த்தேன்
விருப்பமுடன் கவிபாட விழைந்திட்ட நாயேனும்
வேல்முருகன் காலில் வீழ்ந்தேன்
தருகின்ற கவியெலாம் எழுதியது வென்கரம்
தந்ததென் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

# நல்லூர் உற்சவ கால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் இளங்கலைஞர்மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறும்.

மாலை 6.45-8.05 மணிக்கு இளங்கலைஞர் மன்ற மாணவர்கள் வழங்கும் சிறப்பு நிகழ்வுகள் இடம் பெறும்.

வாய்ப்பாட்டு இசை- பொன் ஸ்ரீ.வாமதேவன், ந.ஸ்ரீராம்குமார், மிருதங்க இசை- க.சிவகுமார், வயலின் இசை- உ.குமுதா, நடனம் -சி.மதிவாணி, பாட்டு-மு.துஷ்யந்தன், வயலின்- கே.வேலதீபன், மிருதங்கம்- சி.துரைராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (நி)

## முருகனே! அழகனே!

சிவத்தினில் பழுத்த செம்பழ வடிவே
சிவந்தவான் காட்சியின் அழகே!
உவப்பினில் நிற்கும் ஒல்கிய மேனி
உயிர் எழில் ஓவியம் முருகன்
தவத்தினில் தெரியும் ஞானச்சுடரே
தங்கமே நல்லூர் முருகா!
துவரிதழ் முத்து அருள்மொழி தருவாய்
தூயவநின் திருடம் வந்தேன்

சைவப்புலவர் செ.பரமநாதன்
தாவடி கிழக்கு.

# இராசிபலன்

03.09. 2024
ஆவணி 18, செவ்வாய்க்கிழமை
அமாவாசை முற்பகல் 7.48 மணிவரை
பூரம் பின்னிரவு 4.04 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம் - உத்தராடம்

வளவன்

**மேஷம்** வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வழிபாடு ஆனந்தம் தரும் புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள்.

**மிதுனம்** பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப்புளக்கம் அதிரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும், திடீர் பயணங்கள் கைகூடும், வழிபாட்டால் சிறப்பினைக்காண வேண்டிய நாள்.

**கன்னி** தொழில் ரீதியான பயணங்களின் போது கவனம் தேவை, குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**துலாம்** மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும் நாள்.

**தனுசு** வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், எந்தக் காரியத்தையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.

**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படலாம், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மீனம்** உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், அலுவலகப் பணிகள் துரிதமாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.

ஆலோசனையைக் கேள், ஆனால் உன் சுயபுத்தியைப் பயன்படுத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்-2024




மிதுனம் (மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புநர்பூசம் 1, 2, 3ஆம் பாதங்கள்) எந்த சூழ்நிலையிலும் தன்னம்பிக்கையுடன் நிதானமாக விடா முயற்சியுடன் காரியங்களை செய்து முடிக்கும் ஆற்றல் பெற்ற மிதுன ராசியினரே! நீங்கள் வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

ராசிக்கு மூன்றாம் இடத்தை சனி பார்க்கிறார். திடீர் செலவு ஏற்படும். சிலருக்கு மருத்துவச் செலவு ஏற்படும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தொழில் வியாபாரம் நிதானமாக நடக்கும். கடன் விவகாரங்களில் கவனம் தேவை. தொழில் தொடர்பான காரியங்கள் தாமதமாக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயந்து வேலை செய்ய வேண்டி இடைவெளி குறையும். பிள்ளைகள் நலனில் கவனம் செலுத்துவீர்கள். உறவினர்கள் - நண்பர்களிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். பெண்களுக்கு எதிர்பாராத செலவு உண்டாகும். எதிர்பார்த்த காரிய வெற்றி கிடைக்கும். சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் நடக்கும்.

கலைத்துறையினருக்கு திடீர் செலவுகள் ஏற்படலாம். வெளிவட்டார பழக்கவழக்கங்களை குறைத்துக் கொள்வது நல்லது. ஆயுதம், நெருப்பு இவற்றை



ளுக்கு கல்விக்கான பணிகளில் தாமதம் உண்டாகும். உழைப்பு அதிகரிக்கும்.

## விடாமுயற்சியுடைய மிதுன ராசியினரே

சொன்ன சொல்லை காப்பாற்ற வேண்டும் என நினைப்பவர்கள். இந்த மாதம் ராசிநாதன் புதன் - தைரியாதிபதி சூரியன் ஆகியோர் தைரிய ஸ்தானத்தில் இருக்கிறார்கள். எதிர்பார்த்த பணம் கிடைக்கும். பாக்கியஸ் தானத்தில் சனி இருக கிறார். தொழில் ஸ்தானத்தை ராகு அலங்கரிக்கிறார். நீண்ட நாட்களாக முயற்சி செய்த காரியங்கள் வெற்றியை தரும். இருக்கும். உழைப்பு அதிகரிக்கும். உங்கள் உழைப்பிற்கான அங்கீகாரம் இல்லாமல் போகலாம்.

குடும்பத்தில் உறவினருடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பார்த்துக் கொள்வது நல்லது. சொத்து விவகாரங்களில் கவனம் தேவை. கணவன், மனைவிக்கிடையில் கையாளும் போதும் வாகனங்களில் செல்லும் போதும் கவனம் தேவை. அரசியல் துறையினருக்கு எந்த காரியத்திலும் அவசர முடிவு எடுக்காமல் இருப்பதும் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நல்லது.

திட்டமிட்டபடி காரியங்களை செய்து முடிப்பீர்கள். பணவரத்து தாமதப்பட்டாலும் கையில் இருப்பு இருக்கும். முக்கியமான பணிகள் தாமதமாக நடக்கும். மாணவர்க

**பரிகாரம்:** புதன்தோறும் பெருமாளுக்கு நல்லெண்ணெய் மற்றும் நெய் கலந்து விளக்கு ஏற்றவும்

**அதிஷ்ட கிழமைகள்:**
**வளர்பிறை:** ஞாயிறு, செவ்வாய்
**தேய்பிறை:** ஞாயிறு, வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 14, 15

**அதிஷ்ட தினங்கள்:** 7, 8




கடகம் (புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயில்யம்) ரத்த சம்பந்த உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கடக ராசியினரே! நீங்கள் மனச் சாட்சிக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட போக்கு காணப்படும். பொருட் சேர்க்கை உண்டாகும். வீண் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களுக்கு உதவிகள் செய்வீர்கள். பணவரத்து திருப்தி தரும். வீண்பழி ஏற்படலாம்.

தொழில் வியாபாரம் மெத்தனமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவது ஆறுதல் தரும். வியாபாரம் தொடர்பான காரியங்களில் கூடுதல் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச் பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். பிள்ளைகளைத் தட்டி கொடுத்து எதையும் செய்யச் சொல்வது நல்லது. உங்கள் கருத்துகளுக்கு மதிப்பில்லாமல் போகலாம். பெண்களுக்கு பணவரத்து திருப்தி தரும். வீண் பேச்சைக் குறைப்பது நன்மை தரும்.

கலைத்துறையினருக்கு வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கி சென்று விடுவது நல்லது. மற்றவர்களுக்கு உதவும் போது கவனமாக இருப்பது நல்லது. மனதில் மகிழ்ச்சி உண்டா



நல்லது.

**பரிகாரம்:** திங்கள்தோறும் சிவனையும் அம்பாளையும்

## உறவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கடக ராசியினரே

மாட்டீர்கள். இந்த மாதம் வாக்குஸ்தானத்தில் சூரியன் இருக்க சனி அந்த ஸ்தானத்தைப் பார்ப்பதால் பேச்சைக் கட்டுப்படுத்திக் கொள்வது நன்மை தரும். எதைப் பேசினாலும் வார்த்தைகளில் நிதானத்தைக் கடைபிடிப்பது நன்மை தரும்.

ராஜாங்க ரீதியிலான காரியங்கள் கை கொடுக்கும். வழக்குகளில் சாதகமான சலை சந்திக்க வேண்டி இருக்கும். அலுவலகத்தில் யாரைப் பற்றியும் புறம் கூறாமல் இருப்பது நன்மை தரும். உங்களுடைய பொருட்களை கவனமாக வைத்துக் கொள்வது அவசியம்.

குடும்ப ஸ்தானத்தில் கேது இருக்கிறார். குடும்பத்தில் இருப்பவர்களுடன் அனுசரித்து செல்வது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு கும் படியான நிகழ்ச்சிகள் நடக்கும். அரசியல் துறையினருக்கு கடின உழைப்புக்குபின் முன்னேற்றம் அடைவார்கள்.

எதிர்பார்த்த ஒப்பந்தங்கள் வந்து சேரும். மேலிடத்தை திருப்தி செய்யக் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றமடைய அதிக கவனத்துடன் பாடங்களைப் படிப்பது

வணங்குங்கள்

**அதிஷ்ட கிழமைகள்:**
**வளர்பிறை:** திங்கள், புதன், வெள்ளி
**தேய்பிறை:** திங்கள், புதன், வியாழன்

**சந்திராஷ்டம தினங்கள்:** 16, 17

**அதிஷ்ட தினங்கள்:** 9, 10, 11

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஆயரிடம் ஆசி பெற்றார் அரியநேந்திரன்



(மன்னார்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமிழ் பொது வேட்பாளரின் தேர்தல் பிரசார கூட்டம் மன்னாரின் பல பாகங்களிலும் முன்னெடுக்கவுள்ள நிலையில் நேற்று திங்கட்கிழமை மன்னாரிற்கு விஜயம் மேற்கொண்ட தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேந்திரன் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை சந்தித்து ஆசி பெற்றார்.

அத்துடன் மன்னார் பஜார் பகுதியில் உள்ள தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். (நி-285)

# வவு.எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையிலிருந்த ஊழியர் மீது தாக்குதல்

## மூவர் வைத்தியசாலையில்

(வவுனியா)

வவுனியா, பண்டார வன்னியன் சதுக்கப் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று இரவு 12:15 மணியளவில் எரிபொருள் நிரப்ப வருகை தந்த மூவர் அடங்கிய குழுவினர் அங்கு கடமையில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு பொலிஸாரோடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று இரவு ஒரு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த மூவர் எரிபொருள் நிரப்பும் நிலையத்தின் ஊழியரோடு தர்க்கப்பட்ட நிலையில் திடீரென அவர்களில் ஒருவர் அங்கு வேறு கடமையில் இருந்த எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் மீது தாக்குதல் நடத்தினார்.

தாக்குதல் நடத்தியவர்களை தடுப்பதற்காக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்த மற்றைய ஊழியர் சென்ற போது அவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருகை தந்த போது தாக்குதல் நடத்திய மூவரும் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அதேவேளை தாக்குதல் நடத்தியவர்களில் இருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்றிருந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-250)

# பறிமுதல் செய்யப்பட்ட 3 மில்.சிகரெட்டுகள் அழிப்பு

(கொழும்பு)


இந்த வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டு பறிமுதல் செய்யப்பட்ட சுமார் 3 மில்லியன் சிகரெட்டுகளை அழிக்க இலங்கை சுங்கம் திட்டமிட்டுள்ளது.

இலங்கை புகையிலை நிறுவனத்தினால் சுங்கத் திணைக்களத்தின் மேற்பார்வையில் இந்த சிகரெட்டுகள் அழிக்கப்பட உள்ளதுடன் இதன் பெறுமதி 75 மில்லியன் ரூபாயிற்கும் அதிகம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளில் பிரபல வர்த்தகநாமங்கள் உள்ளடங்குவதாகவும் மோசடி செய்ய முயற்சித்த மொத்த வரித் தொகை 480 மில்லியன் ரூபாயிற்கும் அதிகமாகும் எனவும் சுங்க அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)


முதலாம் ஆண்டு நினைவுதின

அழைப்பு



கடந்த 17.09.2023 அன்று இறைபதமடைந்த எமது குடும்பவிளக்கு

அமரர்.நாகமுத்து சந்திரகாந்தன்

(செல்வானந்தம்)

(சுங்க இலாகா அதிகாரி)

அவர்களின் முதலாம் ஆண்டு சிராத்ததின நிகழ்வு 04.09.2024 நாளை புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்கு வேண்டுவதுடன் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்)

"விமலபுரி" மல்லாமலை,
கம்பர்மலை,
வல்வெட்டித்துறை.

(C-1104)

தகவல்:
குடும்பத்தினர்.



# கரைச்சி பிரதேசசபை கிளிநொச்சி

## தனியார் சுத்திகரிப்பு சேவை பெற்றுக்கொள்ளல் தொடர்பான கேள்வி கோரல் - 2023/2024

1. கரைச்சி பிரதேச சபையின் உள்ளூராட்சி மன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இடங்களுக்கு சுத்திகரிப்பு சேவையினை (Cleaning Service) பெற்றுக்கொள்ளல் தொடர்பாக அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.
   **கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி - 2024.09.03 - 2024.09.18 மு.ப 11.00 மணிவரை**
   **கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 2024.09.18 மு.ப 11.00 மணிவரை**
   **கேள்வி திறக்கும் திகதி - 2024.09.18 மு.ப 11.00 மணி**
2. கேள்விகோரல்கள் யாவும் தேசிய போட்டி விலைக்கேள்வி நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
3. விலைக் கேள்விதாரர் வலிதான வியாபார பதிவினை கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் கறுப்புப் பட்டியலில் இடம்பெறாமல் இருக்கவேண்டும்.
4. தகுதிவாய்ந்த விலைக் கேள்விதாரர் விலைக் கேள்விப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பக்கடிதத்தினை சமர்ப்பித்து அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சியில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 14.00 மணி வரை மீளளிக்கமுடியாத கேள்வி படிவக்கட்டணமாக ரூபா 1,000.00 இனையும் மீளளிக்ககூடிய வைப்புப்பணமாக ரூபா 10,000.00 இனையும் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை இரு பிரதிகளில் தயாரித்து கடித உறையில் அரக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரும், மூலப்படிவத்தில் மூலப்பிரதி எனவும் இணைப்படிவத்தில் இணைப்பிரதி எனவும் எழுதப்பட்டு "தலைவர், பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை,கிளிநொச்சி எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். (பதிவுத்தபால் முடிவுத்திகதிக்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்) அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். பிந்திய விலைக் கேள்வி விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
6. கேள்வி திறக்கப்படும் போது விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்க முடியும்.
7. கேள்வி கோரல் விண்ணப்பங்கள் யாவும் கேள்வி கோரல் மூடியதனைத் தொடர்ந்து கேள்விதாரர்கள்/ கேள்விதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. இக்கேள்வி அறிவித்தல் தொடர்பாக கரைச்சி பிரதேசசபை பெறுகைக்குழுவால் எடுக்கப்படும் முடிவு இறுதியானதாகும்.
9. மேலதிக விபரங்கள் அலுவலக கடமை நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| இல | சுத்திகரிப்பு சேவை தேவைப்படும் இடம் | தேவைப்படும்ஆளணி எண்ணிக்கை | சேவை தேவைப்படும் காலம் |
|---|---|---|---|
| 01 | தலைமை அலுவலகம், கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி | 02 | 2024.09.26 தொடக்கம் 2025.09.25 |
| 02. | பசுமைப்பூங்கா, டிப்போ சந்தி, கிளிநொச்சி | 02 | |

தலைவர்
பெறுகைக்குழு,
கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.


2024.09.03

(சி-1105)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அமைதிக்கு திரும்பிய மணிப்பூரில்
## மீண்டும் வெடித்த வன்முறை
### 2 பேர் உயிரிழப்பு



(டில்லி)

மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் வெடித்த வன் முறையில் 2 பேர் பலியாகி உயிரிழந்து உள்ள னர். இதையடுத்து அங்கு மத்திய, மாநில காவல் துறை யினர் பாதுகாப்பு பணியில் குவிக்கப்பட் டுள்ளனர். மணிப் பூரில் பெரும்பான்மையாக இருக்கும் மெய்தி இன மக்கள், கடந்த வருடம் தங்களுக்கு பழங்குடி யின அந்தஸ்து கோரி, போராட்டங்களில் குதித்தனர்.

இதை எதிர்த்து குக்கி பழங் குடியினர் பேரணி நடத்தினர். அந்த அமைதிப் பேரணியில் கலவரம் வெடிக்க அதன்பிறகு வன்முறைக் காடானது மணிப்பூர்.

கடந்த ஆண்டு மே மாதம் தொடங்கிய இந்த வன்முறை யில் கலவரங்களும் தீவைப்புச் சம்பவங்களும் அரங்கேறின. சில நாட்கள் மணிப்பூர் முழுவதும் பற்றி எரிந்தது. இதனால் பல்லாயிரக்கணக் கான மக்கள் முகாம்களில் தஞ்சமடைந்த னர். இன்னும் பலர், அண்டை மாநிலங்களில் குடியேறினர்.

இதுபோக, பெண்கள் நிர் வாணமாக்கப்பட்டு வீதிகளில் அழைத்துச் செல்லப்பட்ட வீடியோ, உலகையே பதற வைத்தது. மணிப்பூரில் நடைபெற்ற வன்முறையில் இதுவரை 200 இற்கும் அதிக மானோர் கொல்லப்பட்டுள்ள னர்.

எனினும் இந்த வன்முறை, ஓராண்டைக் கடந்தும், இன் றளவும் முடிவுக்கு வர வில்லை. இந்த நிலை, மணிப்பூர் மற்றும் மத்தியில் ஆளும் பாஜகவின் தோல்விச் சின்னமாகவே பார்க்கப்படு கிறது. எதிர்க்கட்சிகளும் இது குறித்து பாஜகவை கடுமையாக விமர்சித்து வருகின்றன.

முன்னதாக, கடந்த மாத தொடக்கத்தில், இருதரப்புக்கு இடையே இயல்பு நிலையை மீட்டெடுப்பதற்கான ஒப்பந்தம் போடப்பட்டது. பின்னர் அமைதி காத்த நிலையில், அம்மாநில முதல்வர் பைரேன் சிங், இன்னும் 6 மாதங்களில் முழுமையாக அமைதி திரும் பும் என உறுதியளித்திருந் தார். (நி)

## ரஷ்யாவிற்கு ஆயுதங்களை அள்ளி வழங்கிய வடகொரியா
### எச்சரித்த மேற்கு நாடுகள்



(பியாங்யாங்)

உக்ரைனிற்கு எதிரான போரில் ரஷ்யாவிற்கு வட கொரியா ஆயுதங்களை பெருமளவில் வழங்கி யுள்ள நிலையில் அதற்கு பதிலாக ரஷ்ய ஜனாதிபதி புடின் குதிரைகளை வழங்கியுள்ளதாக தகவல் கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக தென் கொரியா தெரிவித்திருப் பதாவது.

ரஷ்யா, உக்ரைன் போர் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்து வருகிறது. இந்த போரில் ரஷ்யாவுக்கு உதவும் வகையில் வட கொரியா ஆயுதங்களை வழங்கியுள்ளது.

இதற்கு நன்றி தெரி விக்கும் விதமாக ரஷ்யா வில் இருந்து ஓர்லோவ் டிராட்டர் வகையை சேர்ந்த 24 குதிரைகள் வடகொரி யாவுக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளன.

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் இற்கு குதிரைகள் என்றால் கொள்ளை பிரிய மாம். இரண்டு ஆண்டுக ளுக்கு முன்னரே ஏற்க னவே புடின் 30 குதிரை களை அனுப்பியுள்ளார். இவை அனைத்தும் வட கொரியா அனுப்பிய ஆயுதத் திற்கான பணம் என தென் கொரியா தெரிவித்துள்ளது.

இந்நிலையில் வட கொரியாவின் அரசு ஊடக நிறுவனமான கேசிஎன்ஏ தெரிவித்துத்திருப்பதாவது:

கடந்த சில மாதங்க ளுக்கு முன்னர் ரஷ்ய ஜனா திபதி புடின் வடகொரியா வுக்கு வந்திருந்தார். அப்போது இருநாடுக ளுக்கிடையே கூட்டு ஒப்பந் தங்கள் நிறைவேற்றப் பட்டன.

இதனை தொடர்ந்து கடந்த ஜூன் மாதத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடினுக்கு ஒரு ஜோடி நாய்கள் அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கு பதிலாக ஒகஸ்ட் மாதத்தில் 447 ஆடுகளை புடின் கிம் ஜாங் உன்னிற்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவித் துள்ளது. (நி-6)

## ரஷ்யாவின் உளவாளித் திமிங்கிலம் இறந்த நிலையில் மீட்பு

(மொஸ்கோ)

ரஷ்யாவினால் உள வாளியாகப் பயிற்சியளிக் கப்பட்டதாக சந்தேகிக்கப் படும் திமிங்கிலமொன்று நோர்வே கடலில் இறந்த நிலையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகச் செய்தி வெளி யாகியுள்ளது.

விளாடிமிர் எனப் பெயரி டப்பட்டுள்ள இந்த திமிங் கிலம் நோர்வேயின் தென்மேற்கு புறநகரான ரிசாவிகாவில் கடலில் மித ந்த நிலையில் காணப்பட் டதாகவும், பரிசோதனைக் காக அது துறைமுகத்திற் குக் கொண்டு செல்லப்பட் டதாகவும் வெளிநாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

“செயின்ட் பீட்டர்ஸ்பர்க் உபகரணங்கள்” எனப் பெயர் பொறிக்கப்பட்ட இணைப்புப்பட்டியுடன் பிணைக்கப்பட்ட கமரா ஒன்றுடன் இந்த 15 வயது திமிங்கிலம் ஐந்து ஆண் டுகளுக்கு முன்பு நோர்வே கடல் பகுதியில் முதன் முதலில் அவதானிக்கப் பட்டிருந்தது.

அப்போதே இந்தத் திமிங்கிலம் உளவுப்பணி யில் பயன்படுத்தப்பட்டதாக செய்தி பரவியது.

எனினும் இது தொடர் பில் ரஷ்யா எதுவித பதி லையும் அளிக்கவில்லை.

பல ஆண்டுகளாக இந் தத் திமிங்கிலத்தை கண் காணித்து வரும் மரைன் மைண்ட் என்ற அமைப்பு, திமிங்கிலத்தின் இறந்த உடலைக் கண்டுபிடித்தது.

இதன்போது அதன் உடலில் காயங்கள் எது வும் காணப்படவில்லை என அந்த அமைப்பு தெரி வித்துள்ளது.

60 ஆண்டுகள் வரை வாழும் இந்த பெலுகா வகை திமிங்கிலங்கள், ஐந்து முதல் 15 அடி நீளமும், கிட்டத்தட்ட 1,500 கிலோ எடையும் இருக் கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)



## வன வ...
## வழங...

(நமீபியா)

தென் ஆபிரிக்க நா... நிலவுவதால் மக்க... அந்நாட்டு அரசு ... காலத்தில் இல்லாத... பாதிப்புக்குள்ளாகிய...

இதனால் தென் ஆபி ரிக்காவில் உள்ள மக்கள் தொகையில் பாதியளவு அதா வது சுமார் 14 லட்சம் மக்கள் நமீபியாவில் உள்ள நிலை யில் வறட்சியால் பசி மற்றும் பட்டினியின் பிடியில் சிக்கித் தவிக்க... என... உண... காட்டி... விலங்... அவற்... உண...

## மொஸ்கோ மீ...
## நடத்த உ...

(மொஸ்கோ)

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் இரண் டரை ஆண்டுகளாக நீடித்து வருகிறது.

இந்தப் போரில் உக்ரை னுக்கு அமெரிக்கா, இங்கி லாந்து உள்ளிட்ட நாடுகள் இராணுவ மற்றும் பொரு ளாதார உதவிகளை செய்து வரும் நிலையில், ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு உக்ரைன் தொடர்ந்து பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் ரஷ்யா வின் தலைநகரான மொஸ்கோ மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நடத்த முயற்சி செய்த

கசி...

தாக... யுள்... மொ... சோ... தகவ... ரோ... நகரி... சுட்...

### தனிமையின் கொ...
## 4,000 இற்கு...
## முதியவர்கள்...

(டோக்கியோ)


2024ஆம் ஆண்டு முதல் அரை வருட காலத்தில் ஜப்பானில் 40,000 இற்கும் மேற்பட்ட முதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினியால் வாடும் மக்கள்

# விலங்குகளை உணவாக
# ...ங்கும் நமீபியா அரசு!

**...க நாடுகளில் ஒன்றான நமீபியாவில் கடுமையான வறட்சி ...மக்களுக்கு உணவளிக்க வனவிலங்குகளைக் கொல்ல ...ரசு முடிவெடுத்துள்ளது. கடந்த அரை நூற்றாண்டு ...லாத அளவுக்கு 2023 முதல் கடுமையான வறட்சியால் ...ாகியுள்ளது நமீபியா.**



தவிக்கின்றனர்.

எனவே அவர்களுக்கு உணவளிக்கும் பொருட்டு காட்டில் உள்ள 723 வன விலங்குகளைக் கொன்று அவற்றின் இறைச்சியை உணவாகப் பயன்படுத்த நமீபியா முடிவெத்துள்ளது.

இந்த 723 வனவிலங்குகளில் 300 வரிக்குதிரைகள், 100 காட்டெருமைகள், 50 இம்பாலாமான்கள்,100 எலான்ட் வகை மான்கள், 30 நீர்யானைகள், 83 யானைகள் ஆகியவையும் அடங்கும். இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 150 விலங்குகள் கொல்லப்பட்டு அவற்றின் மூலம் 63 தொன் இறைச்சி பெறப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க நாடுகளில் உள்ள உலகின் மிகப்பெரிய ஆபிரிக்கச் சவானா யானைகள் அழிந்து வரும் பட்டியலில் உள்ள நிலையில் கடுமையான வறட்சியால் உணவுக்காக யானைகள் கொல்லப்படுவது கவலையை ஏற்படுத்தியுள்ளது. அதேவேளை குடிமக்களுக்காக நாட்டின் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதற்கு தங்களின் அரசியல் அமைப்பில் இடம் உள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. (நி)

## ...ா மீது ட்ரோன் தாக்குதல்
## ...உக்ரைன் முயற்சி

### ...கசிந்தது தகவல்




...தாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்து மொஸ்கோ மேயர் செர்கெய் சோபியானின் வெளியிட்டுள்ள தகவலின்படி மொஸ்கோவை நோக்கி வந்த ட்ரோன் ஒன்று நகரின் வெளிப்புறப் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அதே போல் ரஷ்யாவின் தென்மேற்கில் உள்ள பிரையான்ஸ்க் பகுதியின் கவர்னர் அலெக்ஸாண்டர் மோகோமாஸ் வெளியிட்டுள்ள தகவலின்படி உக்ரைனில் இருந்து ஏவப்பட்ட 12 ட்ரோன்களை ரஷ்ய ராணுவம் சுட்டு வீழ்த்தியதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியில் 2 ஆளில்லா விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து சுனிதா இன்றி வரும் விண்கலன்



(வோஷிங்டன்)

சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் இல்லாமல் அவர்கள் சென்ற போயிங் ஸ்டார்லைனர் விண்கலன் மட்டும் பூமிக்கு திரும்பும் என நாசா தெரிவித்துள்ளது.

அவர்கள் பயணித்த போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலனில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக்கோளாறு இதற்கு காரணமாக அமைந்துள்ளதுடன் விண்வெளி மையத்தில் சுமார் 90 நாட்களாக உள்ள அவர்களை பூமிக்கு அழைத்து வர நாசா பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட நிலையில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் தான் அவர்கள் பூமிக்கு திரும்புவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆளில்லாமல் போயிங் ஸ்டார்லைனர் விண்கலன் சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து புறப்பட்டு அது சனிக்கிழமை அன்று தரையிறங்கும் என நாசா தெரிவித்துள்ளது.(நி)

## ...ன் கொடுமையால்
## ...கும் மேற்பட்ட
## ...கள் மரணம்



...யோர் தனிமையில் உயிரிழந்திருப்பதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இவ்வாறு மரணித்த முதியவர்களில் 4000 பேர் இறந்து ஒரு மாதம் கழித்தும், 130 பேர் ஒரு வருடம் கழித்தும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மரணங்கள் ஜப்பானில் அதிகரித்து வரும் தனிமைப் பிரச்சினையின் தீவிரத்தை வெளிப்படுத்துவதாகவும், பல முதியோர் கவனிப்பாரின்றி தமது இறுதிக் காலத்தை தனிமையில் கழித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பிரச்சினைக்கு தீர்வு காண,அரசு மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமாகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போசாக்கு குறைபாட்டால் அதிகரிக்கும் கருச்சிதைவு

**(கொழும்பு)**

**இலங்கையிலுள்ள கர்ப்பிணி தாய்மார்களுக்கு கருச்சிதைவு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் ஜி.ஜி. சமல் சஞ்சீவ எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

குடும்ப சுகாதாரப் பணியகத்தின் சமீபத்திய தரவு அறிக்கைகளின் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கர்ப்பிணித் தாய்மார்களிடையே இரும்புச்சத்து குறைபாடு மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடு காரணமாக கர்ப்பிணிப் பெண்களின் கருச்சிதைவு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

தற்போது, நாட்டில் பிறக்கும் குழந்தைகளின் எடை குறைவாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

கிராம மட்டத்தில் இந்த நிலைமை அதிகளவில் எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட விடயங்களை கவனத்தில் கொண்டு தாய் மற்றும் சேய் ஊட்டச் சத்துத் திட்டங்களை கிராம மட்டத்திலிருந்து நடைமுறைப்படுத்த அதிகாரிகள் உழைக்க வேண்டும் எனவும் வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உணவுப் பொருட்களின் விலைகளை குறையுங்கள்

## நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தேசிய இயக்கம்

(கொழும்பு)

தேநீர், கொத்து ரொட்டி, முட்டை ரொட்டி மற்றும் மதிய உணவு பொதியின் விலைகளை உடனடியாகக் குறைக்க வேண்டும் என நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிபொருள் விலை திருத்தத்தின் பின்னர் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறைக்கப்பட வேண்டும்.

இதன்படி, ஒரு கப் தேநீரின் விலை 10 ரூபாயாலும், கொத்து ரொட்டி மற்றும் முட்டை ரொட்டியின் விலை 20 ரூபாயாலும் குறைக்கப்பட வேண்டும்.

அத்துடன் மதிய உணவு பொதியின் விலையையும் உடனடியாகக் குறைக்க வேண்டும். அரசாங்கத்தின் விலை சூத்திரத்திற்கு அமைய ஒரு லீற்றர் டீசல் மற்றும் பெற்றோலின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

இந்த குறைப்பு நுகர்வோருக்கு பயனளிக்கும் வகையில் அமைய வேண்டும், எனவே அனைத்து வர்த்தகர்களும் விலைகளை குறைத்து இந்த சேமிப்பை தங்கள் வாடிக்கையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். (நி)

# அரகலயவை மறந்து மார்தட்டுகிறார் நாமல்

## அமைச்சர் நிமால்

(கொழும்பு)

போராட்டம் இடம்பெற்ற போது தம்மைக் காப்பாற்றுமாறு நாமல் கதறி அழுதார் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அலரி மாளிகையை முற்றுகையிட்ட போராட்டத்தின் போது, என்னைக் காப்பாற்றுங்கள் என தொலைபேசி ஊடாக நாமல் அழுது புலம்பினார்.

இராணுவத் தளபதிக்கும் அவர் தொலைபேசி அழைப்பு ஏற்படுத்தியிருந்தார்.

அன்றைய நிலைமைகளை மறந்து இன்று நாமல் ராஜபக்ஷ மார்தட்டிக் கொள்வதாக நிமால் சிறிபால டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடியான தருணத்தில் தம்மை மீட்ட ஜனாதிபதிக்கு நன்றி பாராட்ட மக்கள் அணி திரண்டுள்ளதாகவும் அவர்தெரிவித்துள்ளார். (நி)

# சஜித் பிரேமதாசவுக்கு சமத்துவக் கட்சி ஆதரவு




(கண்டாவளை)

ஜனாதிபதித் தேர்தலில் சமத்துவக் கட்சியானது ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிப்பதற்கு தீர்மானித்துள்ளது என அக்கட்சியின் பொதுச்செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று சமத்துவக் கட்சியின் கிளிநொச்சி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச மற்றும் சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளர் மு.சந்திரகுமார் ஆகியோர் கூட்டாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சமத்துவக் கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

பிரதான வேட்பாளர்களோடு நடத்தப்பட்ட பேச்சுக் களில் ஓரளவு திருப்தியளிக்கக் கூடியவகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாசவின் உத்தரவாதங்களே அமைந்தன.

அவருடைய உத்தரவாதங்களுக்கு அப்பால் இலங்கைத் தீவிலுள்ள தமிழ் பேசும் சமூகத்தினராகிய மலையகம் மற்றும் முஸ்லிம் தரப்பினரும் சஜித் பிரேமதாசவையே ஆதரித்து நிற்கின்றனர்.

இவ்வாறு எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கும் தமிழ்பேசும் தேசிய தரப்புகள் ஒன்றிணைந்து நிற்பதன் மூலம் எமது நீதிக்கான குரலைப் பலப்படுத்த முடியும். அத்துடன் ஒரு வலுவான தரப்பாக அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடியதாகவும் இருக்கும்.

எமது மக்களுடைய கோரிக்கைகளையும் நிபந்தனைகளையும் செயலாக்கம் செய்யவும் உதவும் எனச் சமத்துவக் கட்சி கருதுகிறது.

எனவே தமிழ், முஸ்லிம், மலையகத் தரப்பினருடன் அரசியற் கூட்டைக் கொண்டுள்ள ஒரே வேட்பாளரான சஜித் பிரேமதாசவை ஆதரித்து நிற்பது தமிழ் பேசும் சமூகத்தினருக்கு ஒப்பீட்டளவிலான அரசியற் பலத்தையும் சுதந்திரத்தன்மையையும் அளிக்கும் என நம்புகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(நி-315-316-350)


# சேவை நலன் பாராட்டு



திருமதி
யசோதா இராமமூர்த்தி
(SLTS -I)

சேவை விபரம்

- கிளி/கனகாம்பிகைக்குளம் அ.த.க பாடசாலை (16.03.1990-25.01.1996)
- கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி (26.01.1996-02.09.1999)
- கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலை (03.09.1999-05.01.2005)
- கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி (06.01.2005-31.12.2013)
- கிளி/இந்துக் கல்லூரி (01.01.2014-14.03.2021)
- கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி (15.03.2021-03.09.2024)

இன்று தனது 59 ஆவது அகவையில் ஓய்வுபெறும் எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி யசோதா இராமமூர்த்தி அவர்களது சேவையை பாராட்டுவதுடன் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

(சி-1106)


வாழ்த்துவோர்: ஆசிரிய நண்பர்கள்
கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் கந்தனின் தீர்த்தோற்சவம்









வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவ பெருவிழாவின் தீர்த்தோற்சவம் நேற் றுக்காலை இடம்பெற்றது.

முருகப்பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராக பிள்ளையார் மற்றும் சண்டேஸ் வரருடன் உள்வீதி, வெளிவீதி வலம் வந்து அடியவர்களுக்கு அருள் பாலித்தார். அதேவேளை பல அடியவர்கள் அங்கப் பிரதட்சணம் செய்தும், காவடிகள் எடுத்தும் கற்பூர சட்டிகள் ஏந்தியும் முருகப் பெருமானை வழிபட்டனர். (படங்கள்: சிவசாந்தன்)

# மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்கள்

## கிளிநொச்சியில் உறுதிபடத் தெரிவித்தார் சஜித்

(கிளிநொச்சி)

**மாகாண சபைகளுக்கான முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.**

கிளிநொசியில் அமைந்துள்ள சமத்துவக் கட்சியின் ஆதரவு சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது " சமத்துவக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆதரவளித்தமை ஆரோக்கியமாக உள்ளது.

வடக்கில் அபிவிருத்திகள் செய்யப்பட வேண்டி உள்ளது. இதனால் பல எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்ய முடியும்.

அவ்வாறு பல திட்டங்களை செய்ய நாம் திட்டமிட்டுள்ளோம். மாகாண சபை களுக்கான முழுமையான அதிகாரங்கள் வழங்கப்படும். வாழ்வாதரம் உள்ளிட்ட பல திட்டங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங் கப்படும்.

அதற்காக சிறப்பு அலுவலகங்கள் 5 மாவட்டங்களிலும் நிறுவ உள்ளோம். அதே போன்று ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் அபிவிருத்தி நிலையங்கள் நிறுவப்படும். இங்கு உள்ள மக்கள் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன.

காணாமல் ஆக்கப்பட் டோருக்கு தீர்வை பெற்றுக் கொடுப்போம். அத்துடன், ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுக் கொடுப்போம்.

அதற்காகவே இந்த அலுவலகங்களை, மாவட்டம் மற்றும் பிரதேச செயலக ரீதியில் நிறுவ உள்ளோம்.

நானும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவன் என்ற அடிப்படையில் தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாடு எனக்கு உள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 4 பிரதேச செயலாளர் பிரிவுகள் உள்ளது. அந்த நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் ஒவ்வொரு தொழிற் பேட்டைகள் உருவாக்கப் படும். அதே போன்று நான்கு பிர தேச செயலாளர் பிரிவுகளி லும் ஒவ்வொரு IT நிறு வனங்கள் நிறுவப்படும். அதன் மூலம் தொழில் வாய்ப்புக் களை உருவாக்கி கொடுக்கப்படும் இவ்வாறு சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (நி-315-316-350)



துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய கொடியேற்ற திருவிழா நேற்று திங்கட்கிழமை சிறப்பாக இடம் பெற்றது. (படம்: மகாலிங்கம்)

# நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் பரிசளிப்பு வைபவம்- 2024

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக் கூடலினால் நல்லூர் பெருந்திருவிழாவை முன்னிட்டு யாழ்ப்பாணக் கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நல்லூர் ஆலய பூங்காவனத் திருவிழாவான இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (நி)

கீழ்ப்பிரிவு

| மாணவர் பெயர் | பாடசாலை | நிலை |
|---|---|---|
| செல்வி. ர. கபிக்ஷனா | யா/திருக்குடும்ப கன்னியர்மடம் | 1ஆம் இடம் |
| செல்வி. ஜெ. அபிஷனா | யா/கோப்பாய் சரவணபவானந்தா வி. | 2 ஆம் இடம் |
| செல்வி. ந. லிஷானா | யா/ கனகரத்தினம் மத்திய மகா வி. | 3 ஆம் இடம் |
| செல்வி. உ. பூர்விகா | யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வி. | 4 ஆம் இடம் |
| செல்வன். ச. கிருஷன் | யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி | 5 ஆம் இடம் |
| செல்வி. சு. பர்மிகா | யா/ கனகரத்தினம் மத்திய மகா வி. | 6 ஆம் இடம் |
| செல்வி. க. தௌமியா | யா/ இந்து மகளிர்கல்லூரி | 7 ஆம் இடம் |
| செல்வி. வி. லதுஷா | யா/அச்சுவேலி சென் திரேசா மகளிர் கல்லூரி | 8 ஆம் இடம் |
| செல்வி. எஸ். பூர்விகா | யா/திருக்குடும்ப கன்னியர்மடம் | 9 ஆம் இடம் |
| செல்வி. கே. பவிசனா | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 10 ஆம் இடம் |

மத்திய பிரிவு

| மாணவர் பெயர் | பாடசாலை | நிலை |
|---|---|---|
| செல்வி. அருள்நிதி அபினி | யா/முத்துத்தம்பி மகா வி. | 1ஆம் இடம் |
| செல்வி. அ. மதுராகலா வித்தியா | யா/இந்து மகளிர் கல்லூரி | 2 ஆம் இடம் |
| செல்வி. பா. யசிந்தா | யா/கோப்பாய் நாவலர் வி. | 3 ஆம் இடம் |
| செல்வி. பி. மதுஷாலினி | யா/அச்சுவேலி சரஸ்வதி வி. | 4 ஆம் இடம் |
| செல்வி. கோ. யாழிசை | யா/இந்து மகளிர் கல்லூரி | 5 ஆம் இடம் |
| செல்வி. செ. சார்மி | யா/கோப்பாய் சரவணபவானந்தா வி. | 6 ஆம் இடம் |
| செல்வி. வி. அகஸ்ரிகா | யா/வண்ணை நாவலர் மகா.வி | 7 ஆம் இடம் |
| செல்வன். இ. அகிலாஷ் | யா/அத்தியார் இந்துக்கல்லூரி | 8 ஆம் இடம் |
| செல்வி. என். வினுசியா | யா/திருக்குடும்ப கன்னியர்மடம் | 9 ஆம் இடம் |
| செல்வி. இ. திரிஷா | யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வி. | 10 ஆம் இடம் |

மேற்பிரிவு

| மாணவர் பெயர் | பாடசாலை | நிலை |
|---|---|---|
| செல்வி. பு. விஜயதர்சினி | யா/முத்துத்தம்பி மகா வி. | 1 ஆம் இடம் |
| செல்வி. கு. சலுசியா | யா/கொக்குவில் இந்துக்கல்லூரி | 2 ஆம் இடம் |
| செல்வி. விநோதினி | யா/திருக்குடும்ப கன்னியர்மடம் | 3 ஆம் இடம் |
| செல்வி. த. கஜீனா | யா/கொக்குவில் இந்துக்கல்லூரி | 4 ஆம் இடம் |
| செல்வி. கே. சானுஜா | யா/ கனகரத்தினம் மத்திய மகா வி. | 5 ஆம் இடம் |
| செல்வி. ப. ஆரணி | யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி | 6 ஆம் இடம் |
| செல்வி. சு. திலக்சிகா | யா/ இந்து மகளிர் கல்லூரி | 7 ஆம் இடம் |
| செல்வி. [illegible] | யா/[illegible] | [illegible] |
| செல்வி. ஜெ. [illegible] | யா/முத்துத்தம்பி மகா வி. | 9 ஆம் இடம் |
| செல்வி. தி. துளசிகா | யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி | 10 ஆம் இடம் |

## இளைஞர் யுவதிகளுக்கான தொழிற்சந்தை

(அக்கராயன்)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகமும், மனித வலு மற்றும் வேலை வாய்ப்பு திணைக்களமும் இணைந்து நடத்தும் மாபெரும் தொழிற்சந்தை எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. குறித்த தொழிற்சந்தை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இத்தொழிற் சந்தையில் தொழில் வாய்ப்பை எதிர்பார்த்து காத்திருக்கின்ற மற்றும் தொழில் வழிகாட்டல் தேவைப்படுகின்ற இளைஞர், யுவதிகள் அனைவரும் கலந்து பயனடைய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திற்குட்பட்ட பத்திற்கு மேற்பட்ட தொழில்தருநர்கள் வருகை தரவுள்ளதனால் பொருத்தமான தேவைப்பாடுடையவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (நி-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 570





முல்லையாற்றங்கரையோரமாகக் குதிரையை மெதுவாகவே செலுத்திக் கொண்டு வந்தியத்தேவன் இரவெல்லாம் பிரயாணம் செய்தான். மூன்றாம் ஜாமத்தில் வால் நட்சத்திரம் அதன் பூரண வளர்ச்சியை அடைந்து வானத்தில் ஒரு நெடிய பகுதியை அடைத்துக் கொண்டு காணப்பட்டது. மக்கள் உள்ளத்தில் பீதியை விளைவித்த அந்தத் தூமகேதுவின் காரணமாக உண்மையிலேயே ஏதேனும் விபரீதம் ஏற்படப் போகிறதா அல்லது இதெல்லாம் வெறும் குருட்டு நம்பிக்கைதானா என்று அடிக்கடி அவன் சிந்தனை செய்தான். நந்தினியின் நினைவும் இடையிடையே வந்து கொண்டிருந்தது. அவள் கூறிய வார்த்தைகள் எல்லாம் அவன் மனத்தில் நன்கு பதிந்திருந்தன. முதல் தடவை தஞ்சை அரண்மனையில் அவளைப் பார்த்தபோது ஏற்பட்ட அருவருப்பு உணர்ச்சி இப்போது மறைந்துவிட்டது. ஏதோ பயங்கரமான துன்பங்களில் அடிபட்டவள் இவள் என்ற எண்ணத்தினால் ஒருவித அநுதாபமே உண்டாகியிருந்தது. ஆயினும் அவளுடைய நோக்கம் என்ன, அவள் செய்ய விரும்பும் காரியம் என்ன, அவளுடைய உண்மையான வாழ்க்கை வரலாறு என்ன என்பவை மர்மமாக இருந்தபடியால் ஒரு பக்கத்தில் கோபமும் இருந்தது. ஒப்பில்லாத சௌந்தரியத்தோடு ஏதோ ஒருவித மாயாசக்தி உடையவள் அவள் என்றும் தோன்றியது. ஆதலின் அவளுடன் இனி எவ்வித சம்பந்தமும் வைத்துக்கொள்ளாமலிருப்பதே நல்லது. பனை இலச்சினை உள்ள மோதிரத்தை அவள் திருப்பி வாங்கிக் கொண்டிருந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும். அதை வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டாளே? நதியிலே எறிந்துவிடலாம் அதற்கும் மனம் வரவில்லை. இந்த அபாயகரமான காலத்தில் அது மீண்டும் சமயத்துக்கு உபயோகப்படலாம் எதற்காக எறிய வேண்டும்?

பழையாறைக்குச் சென்று இளைய பிராட்டியைப் பார்த்துச் சொல்லவேண்டிய செய்தியையும் சொல்லிவிட்டால், அப்புறம் அதை எறிந்தே விடலாம். இம்மாதிரி தொல்லையான காரியங்களில் பின்னர் பிரவேசிக்கவே கூடாது. இரவு நாலாம் ஜாமத்தில் கிழக்குத் திசையில் வெள்ளி முளைத்தது. சுக்கிரனை எதிரிட்டுக் கொண்டு போகக் கூடாது என்று வந்தியத்தேவன் கேள்விப்பட்டிருந்தான். குதிரையை நிறுத்தி ஒரு மரத்தில் கட்டிவிட்டுத் தானும் தரையில் படுத்துச் சிறிது உறங்கினான்.

### 15 ஆம் அத்தியாயம்
### காலாமுகர்கள்

உதய சூரியனுடைய செங்கதிர்கள் வந்தியத்தேவனுடைய முகத்தில் சுளீர் என்று பட்டு அவனைத் துயிலெழுப்பி விட்டன. உறக்கம் தெளிந்ததும் எழுந்திருக்க அவனுக்கும் மனம் வரவில்லை, கண்ணை விரித்துப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் பயங்கர ரூபமுள்ள இரண்டு சாமியார்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய திரித்துவிட்ட சடை, ஒரு கையில் திரிசூலம் இன்னொரு கையில் அக்கினி குண்டம் இவற்றிலிருந்து அவ்விருவரும் காலாமுக வீர சைவர்கள் என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். இவர்களுடன் வாதப் போர் செய்வதற்கு ஆழ்வார்க்கடியான் இங்கு இல்லையே என்று எண்ணம் உண்டாயிற்று. அந்தக் காலாமுகச் சாமியார்கள் போகும் வரையில் கண்ணை மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்வதென்று தீர்மானித்தான்.

அவர்கள் அவன் பக்கத்தில் வந்து நிற்பதாக அவன் உணர்ந்தபோது கண்களைத் திறக்கவில்லை. அவர்களில் ஒருவர் அருகில் வந்து கனைத்தபோது, அவன் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை. "சிவோஹம்! பையன் நல்ல கும்பகர்ணனாயிருக்கிறான்" என்றார் ஒருவர்.

"சிவோஹம்! இவனைப் போல் ஒரு வாலிபப் பிள்ளை நமக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்று சொன்னார், இன்னொரு சாமியார்.

சிவோஹம்! ஆளைப்பார்த்து முகம் களையாயிருக்கிறதே என்று சொல்லுகிறாய்! இவனால் நமக்குப் பயன் ஒன்றுமில்லை. வெகு சீக்கிரத்தில் இவனுக்கு ஒரு பெரிய ஆபத்து வரப்போகிறது!" என்றார் முதல் வீரசைவர்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## சிறுவனின் புத்திசாலித்தனம்

ஒரு கிராமத்தில் புரோகிதர் ஒருவர் வசித்து வந்தார். அவருக்குப் பூர்வீகமாக சிறிது நிலம் இருந்தது. அந்த நிலத்துக்கு வரி செலுத்தவில்லை. அதனால் மாவட்ட ஆட்சியாளர் ஆணையின்படி, புரோகிதரை சிறையில் அடைத்தனர். புரோகிதரின் தந்தை இறந்து ஒரு வருடம் ஆயிற்று. அந்த நினைவுக்காக சமூக வழக்கப்படி சடங்குகள் செய்வது வழக்கம்.

புரோகிதரோ சிறையில் இருக்கிறாரே எப்படிச் செய்வது?

"ஊராருக்கெல்லாம் நினைவுபடுத்தி சடங்குகள் செய்வாரே அவருடைய தந்தைக்குச் சடங்கு செய்ய முடியாமல் அவர் சிறையில் அடைபட்டுக் கிடக்கும்படி ஆயிற்றே" என்று புரோகிதரின் மனைவி அழுது புலம்பிக் கொண்டிருந்தாள்.

புரோகிதருக்கு ஒரு மகன் இருந்தான். அவனுக்கு வயது பன்னிரண்டு. பள்ளியில் படித்துக் கொண்டிருந்தான்.

விடிந்தால் சடங்கு நாள். தாயின் துக்கத்தையும் தந்தையின் நிலையையும் நினைத்து, இரவு முழுதும் தூங்காமலேயே யோசனை செய்தபடி இருந்தான் சிறுவன்.

விடியற்காலையில் எழுந்து நடந்தே பத்து மைல் தொலைவில் இருந்த மாவட்ட ஆட்சியாளர் பங்களாவை அடைந்தான்.

ஆட்சியாளரின் காலடியில் விழுந்து வணங்கினான். கண்ணீர் ததும்ப நிலைமையை பணிவோடு கூறினான் சிறுவன்.

உன் கோரிக்கையை ஏற்று உன் தந்தையை மூன்று நாள் மட்டும் விடுவிக்கிறேன். அதற்கு யாராவது ஜாமீன் கொடுக்க வேண்டும் என்றார் ஆட்சியாளர்.

"ஜாமீன் கொடுக்க, எங்களுக்கு எவருமே முன்வர மாட்டார்கள். ஒரே ஒரு வழிதான் உண்டு. என் தந்தை திரும்பி வரும்வரையில் அந்த மூன்று நாட்களுக்கும் நான் சிறையில் இருக்கிறேன் என்றான் சிறுவன்.

பன்னிரண்டு வயது சிறுவனிடமிருந்து கிடைத்த பதில் ஆட்சியாளரின் உள்ளத்தை நெகிழச் செய்து விட்டது.

உடனே ஜாமீன் இல்லாமலேயே புரோகிதரை மூன்று நாட்கள் விடுதலை செய்ய உத்தரவிட்டார் ஆட்சியாளர்.

தந்தையும் மகனும் கிராமத்துக்கு விரைந்து வந்து நடத்த வேண்டிய சடங்குகளை செய்து முடித்தனர். கிராம மக்கள் அனைவரும் சிறுவனைப் பாராட்டினார்கள். புரோகிதர் மூன்று நாட்களுக்குப் பிறகு மீண்டும் சிறை சென்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதை சுபமான எண்ணங்களில் மூழ்கச் செய்வதே உயர்ந்த ஆன்மீக நிலையை அடையும் எளிய வழியாகும்! – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிறவிப் பெரும்பயனை அடைந்ததாக உணர்ந்தோம்!

நல்லூர்க் கந்தனின் தீர்த்தோற்சவம் நேற்று இடம்பெற்றது.

முருகப் பெருமானின் தீர்த்தத் திருவிழாவை இலட்சக்கணக்கான அடியவர்கள் புடைசூழ்ந்து கண்டு பேருவகையுற்றனர்.

தீர்த்தோற்சவம் நிறைவுற்றதும் வேற்பெருமான் அத்தனையும் தங்கமாய் வள்ளி, தெய்வயானை சமேதரராய் விநாயகப் பெருமான் சகிதம் சண்டேசுவரருடன் பவனிவந்த காட்சியைக் கண்ணுற்றபோது, திருப்பெருவடிவம் இதுவன்றோ என உள்ளம் உவந்தேத்தியது.

ஆம், காலைப் பொழுது. கதிரவனின் ஒளிக்கீற்றுக்கள் தங்கத்தில் பட்டு தக தகவென ஒளிவீச, வேற்பெருமான் வீதி உலா வந்த திருக்காட்சியை என்னவென்று சொல்வது.

நல்லூர் முருகப்பெருமானே! உன் அழகை – அலங்காரத்தை எப்படி வர்ணிப்பது.

மனித மொழிகளால் அவற்றை இயம்புதல் எளிதல்ல என்பதனாலோ என்னவோ கண்கள் சொரிந்து கைகள் தலைவைத்து ஐயனே! பிறவிப் பெரும்பயன் இதுவன்றோ என மெய்தான் உணர்ந்து இயம்பியது.

ஆனாலும் உள்ளம் தவிக்கிறது. என்றுமில்லாவண்ணம் இன்று (02.09.2024) அவன் தீர்த்தம் ஆடி அத்தனையும் தங்கத்தால் அலங்காரம் செய்துவர, கூடவே கதிரவன் தானும், அலங்காரக் கந்தனுக்கு அலங்காரம் செய்ய நினைத்து; தன் கதிர் ஒளியை வீச, தங்கத்தில் பட்டொளித்து எங்கும் ஆனந்தமாய் – அற்புதமாய் – தேவரும் காண முடியாத பெரும் ஒளிப்பிழம்பாய் தரிசனம் தந்ததை வார்த்தையால் எப்படிச் சொல்வது.

இந்நினைப்போடு செல்கையில், வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் முன்பு கற்ற ரவிதாஸ் எனும் அன்பன் நினையாப் பிரகாரம் கண்டனன்.

என் சிந்தையில் இருப்பதை அவன் உணர்ந்து கொண்டவன் போல் " நாம் யாழ்ப்பாணத்தில் பிறந்தது நல்லூர் முருகனைத் தரிசிப்பதற்கே..." என்று கூறியவாறு சென்றனன்.

" உலகெல்லாம்..." என்று சேக்கிழாருக்கு முதல் அடி எடுத்துக் கொடுத்தது போல் இருந்தது அவன் உரைத்த வார்த்தை.

உண்மை. யாழ்ப்பாணத் திருமண்ணில் நாம் பிறந்ததன் பேறு நல்லூர் முருகனைத் தரிசித்தல் என்றுணர்ந்தோம்.

(இங்கு யாழ்ப்பாண மண் என்பது ஈழத்திருநாடு என்பதன் சுருக்கம் என்றுணர்க.)

ஆம், வீதி எங்கும் அடியார்கள் அங்கப்பிரதட்சணம் செய்வதைக் கண்டு,

ஊரெல்லாம் கூடி இளைஞர்கள் எல்லாம் ஒன்றாகி, நல்லூர்க் கந்தப்பெருமானுக்கு காவடி எடுத்து, கந்தனை நினைந்து ஆடிக் களைத்து, அவன் திருவருளை வேண்டி நின்றதைப் பார்த்தபோது,

நேர்த்தி வைத்து, விரதம் இருந்து நெற்றியில் திருநீற்றை சிவசின்னமாய் அணிந்து புறஅழகொளியும் அகவொளியும் பரப்பி நின்ற இளவல்களைப் பார்த்த போது,

நாம் யாழ்ப்பாணத்தில் பிறந்த பெரும் பயன் நல்லூர் முருகனைத் தரிசிப்பது என்றுணர்ந்தோம்.

# சுமந்திரனின் அறிவிப்பு தென்னிலங்கை மக்களுக்குச் சிறந்த செய்தியாகும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மக்களைக் குழப்பும் தீர்மானங்களையே எடுப்பார். அவர் தற்போது அறிவித்துள்ள தீர்மானம் தெற்கு மக்களுக்குச் சிறந்த செய்தியாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பம்பலப்பிட்டியவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் எம்.ஏ. சுமந்திரன் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கவுள்ளதாக அறிவித்தமை தொடர்பில் வினவிய போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சுமந்திரன் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தனது நிலைப்பாட்டுடன் வேறுகுழுவுடனேயேசெயற்பட்டு வந்தார். எனவே சுமந்திரன் ஏதேனுமொரு குழுவைத் தெரிவு செய்கின்றார் எனில், நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை தெற்கு மக்கள் சிந்திக்க வேண்டும். சுமந்திரனின் தீர்மானத்தை தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஏற்றுக் கொள்ளவில்லை.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா அதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார். இது மக்களை குழப்பும் செயற்பாடாகும். ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சுமந்திரனே மக்களைக் குழப்பிக் கொண்டிருந்தார்.

எனவே அவரது தீர்மானங்கள் தொடர்பில் வடக்கு மக்கள் மாத்திரமல்ல, தெற்கு மக்களும் அவதானத்துடன் இருக்க வேண்டும். சுமந்திரன் ஏதேனுமொரு தீர்மானத்தை எடுப்பாரானால் அது தெற்கு மக்களுக்குச் சிறந்த செய்தியாகும் என்றார். (ம-7)

## பண்டாரவளை தொடருந்து நிலையத்தில்

# தமிழ் இளைஞன் மீது தாக்குதல் 8 இராணுவ அதிகாரிகள் கைது

பண்டாரவளை, தொடருந்து நிலையத்தில் தமிழ் இளைஞன் ஒருவரைத் தாக்கிக் குழப்பத்தில் ஈடுபட்டனர் எனக் கூறப்படும் 8 இராணுவ அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தொடருந்து நிலைய அதிபரால் பண்டாரவளைப் பொலிஸாருக்குத்தொலைபேசி ஊடாக வழங்கப்பட்ட தகவலுக்கமையவே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவிலேயே இடம்பெற்றுள்ளதுஎன்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.

தியத்தலாவை இராணுவ முகாமில் சேவையாற்றும் மேற்படி இராணுவ அதிகாரிகள், விடுமுறையில் வீடு செல்லும் வழியிலேயே இவ்வாறு ஒழுக்கமற்ற விதத்தில் செயற்பட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தொடருந்தானது பண்டாரவளை தொடருந்து நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்போது தொடருந்து நிலைய அலுவலகக் கடமையின் நிமித்தம் புறப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

அவ் வேளையில் தொடருந்தில் இருந்து இறங்கியுள்ள மேற்படி இராணுவ அதிகாரிகள், பாடல் பாடியுள்ளதுடன், கூச்சல் சத்தமும் எழுப்பியுள்ளனர்.

இதன்போது நிலத்தில் வீழ்ந்திருந்த பணப்பையை அவர்களிடம் ஒப்படைப்பதற்குத் தமிழ் இளைஞன் ஒருவர் சென்றுள்ளார்.

இதன்போது அந்தத் தமிழ் இளைஞன் பணம் களவாடியுள்ளார் என்று கூறி அவர் மீது இராணுவ அதிகாரிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

தொடருந்து நிலைய அதிபரும், அங்கிருந்தவர்களும் தாக்குதலைத் தடுக்கச் சென்ற வேளை, அவர்கள் மீதும் தாக்குதல் நடத்த முற்பட்டு, அடாவடியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பண்டாரவளை தொடருந்து நிலைய அதிபர் மற்றும் தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் ஆகியோரால் பண்டாரவளை பொலிஸ் நிலையத்தில் இரண்டு முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (ம-7)

# பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் மஹாலக்ஷ்மி அம்பாள் நூதன பஞ்சலோக பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு 04.09.2024 புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு கர்மாரம்பம், 5ம் திகதி வியாழக்கிழமை காலை பால்காப்பு, 6ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.49 தொடக்கம் 8.43 மணிக்குள் கும்பாபிஷேகம், வசந்தமண்டபப் பூஜை நடைபெற்று மஹாலக்ஷ்மி அம்பாள் திருவீதி வலம்வருவார் என்பதனை பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (ம-7)

# கலாநிதி கே.ஸ்ரீகணேசன் பேராசிரியராகப் பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலையின் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே.ஸ்ரீகணேசன் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் கடந்த 30 ஆம் திகதி, சனிக்கிழமை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைத்த திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்த ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. ஸ்ரீகணேசனின் மதிப்பீடு மற்றும் நேர்முகத் தேர்வு முடிவுகள் அன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவரின் அடிப்படையில், ஆங்கில மொழி கற்பித்தல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. ஸ்ரீகணேசன் ஆங்கில மொழி கற்பித்தலில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ம-7)

# யாழிலிருந்து கொழும்பு பயணித்த பேருந்து விபத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த தனியார் அதிசொகுசு பேருந்து வேகக் கட்டுப்பாட்டையிழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இருப்பினும் தெய்வாதீனமாக எவருக்கும் பாதிப்பு இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை 3.45 மணியளவில் கம்புஹாவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அதிவேகமாகப்பயணித்த அதிசொகுசு பேருந்து மழை காரணமாக வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

04

### நெகிழ்வற்ற தன்மை (Rigidity)

எழுத்துவடிவிலான அரசியலமைப்புச் சட்டம் இயற்கையாக நெகிழ்வற்றதாக இருக்கும். நாட்டின் உயரிய சட்டம் நெகிழ்வற்றதாகத்தான் இருக்க முடியும். அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டுவருவது முடியாத ஒன்றாக இல்லாவிட்டாலும், அதில் சுலபமாக மாற்றங்களைக் கொண்டு வர இயலாது. அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றங்களைக் கொண்டு வருவது மாநில அரசின் கையிலோ மைய அரசின் கையிலோ இருக்காது. அரசியலமைப்புச் சட்டம் ஒரு நிரந்தரமான ஆவணமாகக் கருதப்படும்.

### நீதி மன்றங்களின் அதிகாரம் ( Authority of courts ):

கூட்டாட்சி முறையில் அரசியலமைப்புச் சட்டத்தின் உயரிய தன்மையானது இன்றியமையாதது. இல்லாவிடில் அரசியலமைப்புச் சட்டத்தின் உயரிய தன்மையைச் செயல்படுத்துவது இயலாதது ஆகிவிடும்.

கூட்டாட்சி முறையில் மைய மாநில அரசுகளுக்கு அதிகாரம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால் இவைகள் சரியாகச் செயல்படுத்தப் படவேண்டுமானால் இவைகளை மேற்பார்வையிடவும் செயல்படுத்தவும் ஒரு சுதந்திரமான அமைப்பு தேவை. நீதி மன்றங்களுக்கு அவ்வதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நீதி நிர்வாகத்தை மைய மாநில அரசுகள் கட்டுப்படுத்த முடியாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒரு கூட்டாட்சிக்குத் தேவையான அனைத்து அம்சங்களையும் கொண்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படி ஒன்றிய, மாநில அரசுகள் என்ற இரு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவைகளுக்கிடையே அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசைப் பொறுத்த வரை தமக்கு அளிக்கப்பட்ட துறைகளில் முழு அதிகாரம் செலுத்திக் கொள்ளலாம். அது போலவே மாநில அரசும் தமது துறைகளில் முழு அதிகாரம் செலுத்திக்கொள்ளலாம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுத்து வடிவிலானது. அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகளை மாற்றுவது எளிதானது அல்ல. மாற்றம் தேவைப்பட்டால் பெரும்பான்மை மாநில அரசுகளின் ஒப்புதலும் தேவைப்படும்.

ஒன்றிய, மாநில அரசுகளுக்கிடையேயோ அல்லது மாநில அரசுகளுக்கிடையேயோ கருத்து வேறுபாடு ஏற்பட்டால் அவைகளைத் தீர்த்து வைப்பதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டம் உச்ச நீதிமன்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசியலமைப்புச் சட்டத்தின் தன்மையைப் பாதுகாப்பதும், பிரிவுகளைச் செயல்படுத்த உதவுவதும் உச்ச நீதிமன்றத்தின் பொறுப்பு என இந்திய அரசியலமைப்புச்சட்டம் கூறுகின்றது.

இந்திய அரசியலமைப்பு முழுமையான கூட்டாட்சி அல்ல ஆனால் கூட்டாட்சி போன்றது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உண்மையான கூட்டாட்சி அல்ல அது கூட்டாட்சி போன்றது (Quasi Federal ) என்று சில அறிஞர்கள் கூறுவதுண்டு. சில நேர்வுகளில் ஒன்றிய அரசு, மாநில அரசின் அதிகாரங்களில் தலையிட வாய்ப்பு உள்ளது என்றும் ஆதலால் மாநில அரசுகள் ஒன்றிய அரசிற்கு சமமானவை அல்ல என்றும் அவைகள் ஒன்றிய அரசின் கீழுள்ள அரசுகள் போல செயல்பட வேண்டிவருகின்றது என்றும் அதனால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் ஒரு முழுமையான கூட்டாட்சி தத்துவத்தை எதிரொளிப்பதில்லை என்றும் கூறுகின்றனர். இதற்கு ஆதாரமாக கீழ்க்கண்டவாதத்தை முன் வைக்கின்றனர்.

### ஆளுநரின் நியமனம்

ஒவ்வொரு மாநிலத்திற்கும் குடியரசுத் தலைவர் ஆளுநரை நியமிப்பார். ஆளுநர் குடியரசுத் தலைவருக்குப் பதிலளிக்கும் பொறுப்புள்ளவர். அவர் பெயரளவிலேயே அரசின் தலைவராக இருந்தாலும் மாநில அமைச்சரவையின் பரிந்துரைக்குக் கட்டுப்பட்டவர். ஒருசில பிரிவுகளின் படி ஆளுநர் மாநில அரசின் சட்டங்களை குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு அனுப்ப வேண்டும். குடியரசுத் தலைவர் இவைகளை மறுப்பதற்கும் அதிகாரம் உண்டு.

### தேசிய நலனுக்காக பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரம்

பாராளுமன்றத்தின் மேலவை, மூன்றில் இரண்டு பங்கு பெருமான்மையுடன் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு மாநிலங்கள் அதிகார வரம்பில் உள்ள ஒரு பொருளின் மீது சட்டமியற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினால், பாராளுமன்றம் அவ்வாறு சட்டமியற்ற முடியும்.

புதிய மாநிலங்களைத் தோற்றுவிக்கவும், தற்பொழுது உள்ள மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கவும் அதிகாரம்.

பாராளுமன்றம் புதிய மாநிலங்களைத் தோற்றுவிக்கலாம். மாநிலங்களின் எல்லைகளை மாற்றியமைக்கலாம். ஒரு மாநிலத்தின் இருப்புத் தன்மை பாராளுமன்றத்தின் விருப்பத்தைப் பொறுத்தது.

### அவசரநிலை பிரகடனம்

அரசியலமைப்புச் சட்டம் மூன்று வகையான அவசர நிலைகளைக் குறிப்பிடுகிறது. அவை:

அ) வெளிநாட்டுப் படையெடுப்பு அல்லது உள்நாட்டுப் புரட்சியினால் வரும் அவசரநிலை (பிரிவு 352),

ஆ) மாநில அரசுகளில் அரசியமைப்புச்சட்டம் செயலிழந்து விடுவது (பிரிவு 356),

இ) நிதி நெருக்கடியினால் ஏற்படும் அவசரநிலை (பிரிவு 360) ஆகும்.

அவசர நிலை பிரகடனப் படுத்தப்பட்டால் மாநில அரசின் அதிகார வரம்பில் உள்ள பொருள்கள் மீது பாராளுமன்றம் சட்டமியற்றாலம். மாநிலத்தின் நிர்வாகம் எப்படிச் செயல்பட வேண்டும் என்று மைய அரசு அறிவுறுத்தலாம். தேவைப்பட்டால் குடியரசுத் தலைவர் மாநில அரசுகளையும் மாநில சட்ட மன்றங்களையும் கலைத்தும் ஆணையிடலாம்.

அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றிய வரைவுக்குழுவின் தலைவர் அம்பேத்கர், கூட்டாட்சி முறைக் குறித்துக் கூறுவது, 'சூழ்நிலைக்கும் நேரத்துக்கும் ஏற்றவாறு இந்தியா கூட்டாட்சி நாடாகவும் ஒற்றையாட்சி நாடாகவும் இருக்கும். சாதாரண நேரங்களில் கூட்டாட்சி நாடாகவும் போர் சமயங்களில் ஒற்றையாட்சி நாடாகவும் செயல்படும்' என்றார்.

முன்னர் கூறியது போல் இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல் என்பன மட்டுமின்றி பொதுப்பட்டியல் என்றொன்று உண்டு. பொதுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விவகாரங்களில் மாநில அரசும் சட்டம் இயற்றலாம், மத்திய அரசும் சட்டம் இயற்றலாம். ஆனால், மத்திய அரசும், மாநில அரசும் ஒரே விவகாரம் குறித்து நேரெதிரான இரு சட்டங்கள் இயற்றினால், மத்திய அரசு இயற்றிய சட்டம்தான் செல்லும். மாநில அரசு இயற்றிய சட்டம் செல்லாது ஆகிவிடும்.

மத்தியப் பட்டியல், மாநிலப் பட்டியல், பொதுப்பட்டியல் ஆகியவற்றில் குறிப்பிட்டது போக மீதமுள்ள அதிகாரங்கள் இந்தியாவில் மத்திய அரசிடம்தான் உள்ளன. மத்திய அரசுக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும்பட்சத்தில், அது ஒரு மாநிலத்தையே இல்லாமல் ஆக்கி, அதனை வேறு ஒரு மாநிலத்துடன் இணைத்துவிடலாம்.

ஆனால் அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் அங்கே மீதமுள்ள அதிகாரங்கள் அனைத்தும் மாநில அரசுகள் வசம்தான் உள்ளன. அமெரிக்காவில் உள்ள மாநிலங்களின் சம்மதம் இல்லாமல் அவர்களின் எல்லைகளைக் குறைக்கவோ, கூட்டவோ முடியாது. ஏனென்றால், அமெரிக்காவில் ஒரு மாநிலத்தின் குடிமகன் என்றொரு அந்தஸ்து உண்டு. ஆனால் இந்தியாவில், இந்தியக் குடிமகன் என்கிற ஒரே ஒரு அந்தஸ்து மட்டுமே உண்டு.

### இந்திய அரசியலமைப்பிலுள்ள இணைப்புப் பட்டியல்களில் சில...

இந்தியாவானது மத்திய அரசு அளவில் கூட்டாட்சியையும், அவற்றின் மாநிலங்கள் அளவில் ஒற்றையாட்சியையும் கொண்டுள்ளது. இதனை செவ்வனே செய்ய இந்திய அரசியலமைப்பு அதிகாரங்களை பட்டியல்கள் வழியாக வழங்குகின்றன.

இந்திய அரசியலமைப்பில் உள்ள பட்டியல்களில் எண்ணிக்கை பன்னிரெண்டு ஆகும். அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது, இருந்த பட்டியல்களின் எண்ணிக்கை எட்டு மட்டுமே ஆகும்.பின்னர், 1951, 1985, 1992, 1992 ஆகிய ஆண்டுகளில் நான்கு பட்டியல்கள் அரசியலமைப்புச் சட்டத்திருத்தங்கள் மூலம் பின்னர் இணைத்துக் கொள்ளப்பட்டன.

இந்திய ஒன்றியத்தில் அடங்கியுள்ள மாநிலங்களையும், ஒன்றிய ஆட்சிப் பகுதிகளையும் பற்றி விவரிப்பது முதற்பட்டியலாகும். தற்சமயம் 28 மாநிலங்களும், 8 ஒன்றிய ஆட்சிப் பகுதிகளும்(ஒன்றியப் பகுதிகள்), ஒரு தேசிய தலைநகர் பகுதியும் இந்தியாவில் உள்ளன.

மாநிலங்களவையில் உறுப்பினர்கள் ஒதுக்கீடு தொடர்பானது நான்காவது பட்டியல். மாநிலங்களுக்கும் ஒன்றியப் பகுதிகளுக்கும் மாநிலங்களவையில் உறுப்பினர்களைப் பிரித்தளிப்பது பற்றிய விளக்கம் தரப்படுகிறது.

தாழ்த்தப்பட்டோர் (SC) மற்றும் பழங்குடி மக்கள் (ST) வாழும் பகுதிகளின் கட்டுப்பாடும் நிர்வாகமும் பற்றி ஐந்தாவது பட்டியல் விளக்குகிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோ.சைக்கிளி...

உயிரிழந்துள்ளார்.

செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த மேரிரோசாரி ஈஸ்வரபாதம் (வயது- 63) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை காலை தேவாலயத்துக்குச் சென்று விட்டு மகனுடன் மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் அமர்ந்து வந்துள்ளார்.

இந்நிலையில் நிலைதடுமாறி மோட்டார் சைக்கிளால் விழுந்து தலையில் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## சுன்னாகம்...

ரீதியாக பாதிக்கப்பட்டு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவரும் நிலையில் அவருக்கு நீதி பெற்றுத் தருமாறு அவரின் மனைவி கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாங்கள் யாழ்.சுன்னாகம் பகுதியில் வசித்து வருகின்றோம்.

இந்நிலையில் கடந்த 28ஆம் திகதி இரவு 11 மணியளவில் சுன்னாகம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் திருடர்கள் போல் மதில் ஏறிப் பாய்ந்து எமது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சப்பாத்துக் கால்களால் கதவுகளை உதைந்து எனது கணவரைப் பெயர் கூறி அழைத்தார்கள்.

கணவன் அங்கு வந்தபோது அவரின் கன்னத்தில் அடித்து துப்பாக்கி காட்டி, மிரட்டி, சப்பாத்துக் கால்களால் தாக்கினார்கள்.

இந்நிலையில் பொலிஸ் அதிகாரிகளிடம் ஏன் எனது கணவனை அடிக்கின்றீர்கள் என நான் கேட்டபோது எங்களுக்கும் துப்பாக்கியால் தாக்க வந்ததுடன் வீட்டிலிருந்த அண்ணன், அண்ணி, பெறாமகள் ஆகியோரை கெட்ட வார்த்தைகளால் பேசி அவர்களைத் தாக்க முற்பட்டதுடன் எனது கணவனின் பெறாமகளின் தொலைபேசியைப் பறித்து நீ வீடியோ எடுக்கின்றாய் எனத் தெரிவித்து தொலைபேசியை அடித்து உடைக்க முற்பட்டார்கள்.

இந்நிலையில் உங்களுக்கு யார் இந்த அதிகாரத்தைத் தந்தது என வீட்டிலிருந்தவர்கள் பொலிஸ் அதிகாரிகளைக் கேட்க அந்த ஆத்திரத்தை கணவன் மீது திணித்தார்கள்.

அதேவேளை நிறைமாதக் கர்ப்பவதி என்றும் பார்க்காது என்னைத் துப்பாக்கி காட்டி மிரட்டினார்கள்.

அதேவேளை ஏன் கணவரை கைது செய்கின்றீர்கள் என நான் கேட்ட போதும் கணவனை சப்பாத்துக் கால்களால் தாக்கி இழுத்துக் கொண்டு போனார்கள்.

இந்நிலையில், கணவனை தாக்கி வீட்டிற்கு வெளியே நின்ற முச்சக்கர வண்டிக்குள் ஏற்றியதுடன் அவரின் கண்களையும் கட்டிவிட்டு வழியிலே நாங்கள் இவரைக் கைது செய்துள்ளோம் என்று கூறினார்கள்.

இதேவேளை அவரைச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று அங்கே சிறையில் அடைத்தார்கள்.

இந்நிலையில் நாம் அங்கு சென்று கைதுக்கான காரணத்தை விசாரித்த போது அவர் மீது இதுவரை எவ்வித வழக்குகளும் போடவில்லை எனவும் சந்தேகத்தின் பேரிலேயே தடுத்து வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

அடுத்த நாள் காலை மீண்டும் நாம் பொலிஸ் நிலையம் சென்றபோது அவரை உச்சநீதிமன்றத்திற்கு கொண்டு செல்லவுள்ளதாகவும் அங்கிருந்த பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனையடுத்து DGIயிடம் சென்று அங்கு இது தொடர்பில் முறையிட்டோம்.

DGI உடனடியாக சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் தொலைபேசியில் கேட்டார்.

அதேவேளை சுன்னாகம் பொலிஸ் நிலையத்திலிருந்த எனது கணவரை முட்டுக்காலில் இருக்கவிட்டு உடலில் கடுமையாகத் தாக்கியதுடன் கோடரியை வைத்து மிரட்டி, தகாத வார்த்தைகளால் பேசினார்கள்.

இந்நிலையில் பொலிஸாரின் கடுமையான தாக்குதலால் கணவனின் உடலில் கண்டல் காயங்கள் ஏற்பட்டதுடன் நடக்கமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதேவேளை உணவு உண்ண முடியாத நிலையில் நீர் ஆகாரங்களை மட்டுமே அருந்தி வருகின்றார்.

இந்நிலையில் அவர் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த சம்பவத்திற்கு எமக்கு நீதி வேண்டும். இனியும் எம்மால் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகளுக்கு தகுந்த நடவடிக்கை எடுத்து கணவனுக்கான நீதியைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார்.(ம-7)

## புல...

திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, நாடு முழுவதும் உள்ள 2,849 பரீட்சை மையங்களில் 15ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

செப்ரெம்பர் 2 முதல் செப்ரெம்பர் 9 வரை விண்ணப்பதாரர்களின் விபரங்களில் ஒன்லைன் முறையின் மூலம் திருத்தங்களைச் செய்யலாம். (ம-7)

## மத்திய...

உறுப்பினர் வி.தர்மலிங்கத்தின் நினைவேந்தலில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.

ஆனாலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மத்திய செயற்குழு எடுத்த தீர்மானத்தை ஒற்றுமையாக இருந்து நடைமுறைப்படுத்துவோம் என்றார்.

தமிழரசுக் கட்சி சஜித்துக்கு ஆதரவு என்பது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு என மாவை சேனாதிராஜா நேற்று முன்தினம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கடன்...

விடுத்துள்ளார்.

"கடன்வாங்குவதை நிறுத்த வேண்டிய நேரம் இது. மற்றைய மாவட்டங்களில் தேசங்களில் தங்கியிருப்பதை நிறுத்த வேண்டிய நேரம் இது. இலங்கையர்கள் தாங்களாகவே தேசத்தைக் கொண்டு நடத்தக்கூடிய நிதியை உழைக்க வேண்டும்," என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 73ஆவது ஆண்டு தின நிகழ்வில் கலந்து கொண்டபோது ஜனாதிபதி ரணில் இவ்வாறு கூறினார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2024.09.02
சீட்டிழுப்பு இலக்கம் 5584
P 0 1 3 0 5 3
அத சம்பத P 3 0 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 159
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.09.02
சீட்டிழுப்பு இலக்கம் - 1614
W 02 19 61 74 W
34141

மெகா பவர்
திகதி 02/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1932
S 20 02 09 47 62
37455

லக்கி 7 VIP
திகதி 2024.09.02
சீட்டிழுப்பு இலக்கம் 410
O 5 4 2 4 4 1 O

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3826
சீட்டிழுப்பு திகதி 02.09.2024
I 04 25 33 53
I 46926

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.02
சீட்டிழுப்பு இலக்கம் 0893
கன்னி 02 15 27 54 கன்னி
87675 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
02.09.2024 வெற்றி வாரம் 292 வர்ணம் ஊதா
M 2 4 1 9 5 4
35959
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,259,440.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2558 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 02.09.2024 தினம் திங்கள்
33 39 49 53 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,452,146.40
DLB

சனிதா
திகதி 2024.09.02 வெற்றி வாரம் 4719
08 27 39 44 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,782,306.00
58645
DLB

சீட்டிழுப்பு வாரம் 4270 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.02 தினம் திங்கட்கிழமை
08 17 28 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,566,429.60
121256
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 05 04 22 49 56
1734 பச்சை 02.09.2024 திங்கள்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 542,594,658.60
DLB

ஜயோதா Jayoda
திகதி 2024.09.02 வெற்றி வாரம் 2056 வர்ணம் செம்மஞ்சள்
10 14 51 52 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,142,820.40
DLB

ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம்: 2384
சீட்டிழுப்பு திகதி: 2024.09.02
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,699,181.60
24 52 59 70 C
538440


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- EDUCATION -
# Yaalpaanam 4

JAN 2025 INTAKE

Some of our Successes Stories




See more

UK | AUSTRALIA | USA | CANADA | NEW ZEALAND | GERMANY

கலந்தாய்வு இலவசம்
(No consultant fees)

07 Sep 10 AM to 03 PM VAVUNIYA பொது நூலகம்

08 Sep 10 AM to 03 PM JAFFNA - பொது நூலகம் கேட்போர் கூடம்

- புலமைப்பரிசில்கள் (Scholarship)
- IELTS தள்ளுபடிகள்
- மலிவான கல்வி கட்டணம்
- பல்கலைக்கழக நேர்காணல் இல்லை

(C-1107)

Call us

ICFS INTERNATIONAL CENTER FOR FOREIGN STUDIES

077 740 6793 | 0112 827 320

151D, High Level Road, Nugegoda | www.icfs.lk

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1110)

076 825 7716 (ஆகாஸ்)

---

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

---

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
47,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம்
பெற்றுக்கொள்ளலாம். (305)

## APEX TRAVELS

0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

---

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான
விசாவினை உறுதிப்படுத்திக்
கொள்ள குறைந்த கட்டணத்தில்
வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு: (304)

074 17 37 684

---

## வீடு வாடகைக்குண்டு

யாழ். கச்சேரி வீதியில் உள்ள
வீட்டின் மேல்மாடியில் உள்ள
இரு அறைகள் வாடகைக்கு
விடப்படும். (பெண்கள்
விரும்பத்தக்கது) (C-1108)

077 703 4225

---

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள
நிரந்தரகுடியுரிமையுடனான 15'000
Care Giver வாய்ப்புக்களுக்கான
சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன்
Care Giver கற்கை நெறி மற்றும்
Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

(C-1109) CIMS College
49A, Chapel Street, Jaffna.

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

---

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்


- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1109)

---

# ஓராண்டு நினைவலைகள்



## அமரர்
## ஏகாம்பரநாதன் சங்கர்
## (நயினாதீவு)

அன்னைமடியில்
16.05.1971

அலங்காரக் கந்தன் அடியில்
15.09.2023

**திதி : ஆவணி மாத பூர்வபக்க பிரதமை**

மணிபல்லவத் தாயாம் மலரின் மடியினிலே
அணிசேர்த்த அகல் விளக்கே அணைந்தனையோ?
பிணியிருந்தும் ஊர்வந்து பெற்றோரை அனுசரித்து
கனியிருக்கக் காய்கவர்ந்த கவலையினால் வாடுகின்றோம்.

நல்லைக் கந்தன் பூங்கா வனத்தன்று
அல்லல் அறுத்து அவனடியே சென்றிட்ட
செல்லத் திருக்குமரா **சங்கர்** எனுஞ்செல்வா
பொல்லா நோய்தொடரப் போயினையோ எமைவிட்டு.

சந்தனத் திருமேனிச் சங்கரே உன் பிரிவால்
சிந்தை கலங்கிச் செய்வதொன்றும் தெரியாமல்
நொந்து தவிக்கின்றோம் மீண்டுமிங்கு வாராயோ?
எந்தை முருகன் இணையடியில் சாந்திபெறும்.

ஆண்டொன்று சென்றாலும் ஆறவில்லை எம்துயரம்
மீண்டும் வருவாயென விழிதிறந்து கிடக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 21/21, கலாசாலை வீதி,
2 ம் ஒழுங்கை, திருநெல்வேலி.

பிரிவால் துயருறும் :
குடும்பத்தினர்

(1840)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.